**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

முன்னிலை – திரு.P. காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்.

**2026 ஜுன்–08–ம் நாள் திங்கள்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி–25–ம் நாள்

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.1979/2022**

**CNR.No.TNTH07-006141-2022**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.177/2019. |
| // எதிர் // | | |
| எதிரி | – | ராம்குமார் (வயது 46/2019),<br>த/பெ.பூதநாதபிள்ளை,<br>பெரும்செல்வவிளை, ஆலுார் போஸ்ட், நாகர்கோவில். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 279, 337 இதச–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 279, 337 இதச–ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 279, 337 இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 255(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. |

இவ்வழக்கானது 06.12.2022–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணையின் போது, குற்றம் முறையிடுபவர் தரப்பில், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, உத்தமபாளையம் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்

திரு.M.S.முத்துக்குமரன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

**இறுதியறிக்கையின் சுருக்கம்**

1) கடந்த 05.06.2019ம் தேதி காலை 06.45 மணியளவில் 1ம் சாட்சி TN 60 AZ 4862 TVS XL 100 இருசக்கர வாகனத்தில் அவரது மனைவியும் பெரியகுளத்தில் உள்ள தங்களது உறவினர் வீட்டு விஷேசத்திற்கு செல்வதற்காக சம்பவ இடமான கம்பம் புது பஸ் நிலைய ரோடு மாரியம்மன் கோவில் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது, எதிரி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 74 N 1872 அரசு பேருந்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று, 1ம் சாட்சி மீது மோதி விபத்தை உண்டாக்கியதில், 1ம் சாட்சிக்கு இடது கால் முட்டிக்கு பின்புறம், வலது கனுக்கால் ஆகிய இடங்களில் சிறுகாயத்தை ஏற்படுத்திய எதிரியின் செயல் ச/பி 279, 337 இதச–ன் கீழ் கம்பம் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி இறுதியறிக்கையை பரிசீலனை செய்து, இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் குவிமுச 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, மேலும் ச/பி 279, 337 இதச–கீழ் குற்றச்சாட்டுகள் குவிமுச பிரிவு 240(1)–ன் படி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3) எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் இல்லை.

**4) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்று ஆவணங்களின் படி வழக்கு சுருக்கம்–**

4.1) எதிரி மீதான குற்றச்சாட்டுகளை பொறுத்து, அ.சா.1 செல்வேந்திரன் தனது சாட்சியத்தில், கடந்த 05.06.2019 ம் தேதி மாலை 07.00 மணியளவில் தான் பெரியகுளம் செல்வதற்காக தனது மனைவியுடன் கம்பம் மாரியம்மன் கோவில் அருகே உள்ள சிக்னல் அருகில் TN 60 AZ 4862 என்ற XL பைக்கில் வந்தபோது எதிர் திசையில் நாகர்கோவில் அரசு பேருந்து வந்து தனது பைக்கில் மோதிவிட்டது. தனக்கு காலில் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு தனது மனைவி கம்பம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். கம்பம் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பேருந்தை ஓட்டி வந்த நபர் நாகர்கோவிலை சேர்ந்த ராம்குமார் என்பவர் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.2) அ.சா.2 பசுபதி தனது சாட்சியத்தில், கடந்த 05.06.2019 ம் தேதி மாலை 07.00 மணியளவில் தான் பெரியகுளம் செல்வதற்காக தனது கணவருடன் கம்பம் மாரியம்மன் கோவில் அருகே உள்ள சிக்னல் அருகில் XL பைக்கில் கிழக்கிருந்து மேற்காக இடதுபுறம் வந்தபோது வடக்கிருந்து தெற்காக வந்த அரசு பேருந்து வந்து தங்களது பைக்கில் மோதிவிட்டது. தனக்கும், தனது கணவருக்கும் காலில் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு தாங்கள் கம்பம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். ஒரு வாரம் தானும் தனது கணவரும் சிகிச்சை பெற்றோம். பேருந்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான். தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது தான். அது கம்பம் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது போடப்பட்டது என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.3) அ.சா.3 பூமிநாதன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான். கடந்த 05.06.2019 ம் தேதி பகல் 12.00 மணியளவில் கம்பம் மாரியம்மன்கோவில் அருகே தானும், தங்கராஜ் என்பவரும் இருந்தபோது அங்கு வந்த போலிசார் விபத்து வழக்கு சம்பந்தமாக

விசாரித்து வரைபடம் வரைந்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அதில் தானும், தங்கராஜ் என்பவருடம் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.4) அ.சா.4 ஈஸ்வரன் தனது சாட்சியத்தில், வழக்கு விபரம் எதுவும் தெரியாது. போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியளித்துள்ளார். அ.சா.5 மாரியம்மாள் தனது சாட்சியத்தில், கடந்த 05.06.2019ம் தேதி காலை 09.00 மணியளவில் உத்தமபாளையம் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக கம்பம் வடக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது கம்பம் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த செல்வேந்திரன் என்பவரது கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 177/2019 இதச பிரிவு 279, 337 ஆக வழக்கு பதிவு செய்தேன். அன்றைய தினமே 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தங்கராஜ், பூமிநாதன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். பின்னர் செல்வேந்திரன், பசுபதி, ஈஸ்வரன், தங்கராஜ், பூமிநாதன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியை நிலையத்தில் வைத்து 06.06.2019—ல் கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட TN 74 N 1872 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தையையும், TN 60 AZ 4862 என்ற பதிவெண் கொண்ட TVS XL 100 என்ற வாகனத்தையும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தில்குமார் என்பவரையும் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன். பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதீப் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர் பின்னர் வழக்கு விசாரணை முடித்து 22.06.2019ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட பிறகு, வழக்கில் எதிரிக்கு எதிராக உள்ள அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது, எதிரி அவை பொய் சாட்சிகள் என்றும், தனது தரப்பில் சாட்சி இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

<u>7) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள்:-</u>

**(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

**(ii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருந்தால் எதிரிக்கு வழங்க கூடிய தண்டனை விபரம் என்ன?**

7.1) அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள செல்வேந்திரன் என்பவர் தனது மனைவியான பசுபதி என்பவருடன் கடந்த 05.06.2019ம் தேதி மாலை 07.00 மணியளவில் பெரியகுளம் செல்வதற்காக TN 60 AZ 4862 என்ற XL இருசக்கர வாகனத்தில் கம்பம் மாரியம்மன் கோவில் அருகே உள்ள சிக்னல் அருகே வந்தபோது, TN 74 N 1872 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்து அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து மோதி விபத்து ஏற்படுத்தி, அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு காயத்தை ஏற்படுத்தியதாகவே அரசுத்தரப்பு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கே இவ்வழக்காகும்.

7.2) எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 279, 337ன் கீழான குற்றச்சாட்டுக்களை பொறுத்தவரையில், விபத்து காயம்பட்ட நபர்களான செல்வேந்திரன் மற்றும் பசுபதி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் விபத்து சமயத்தில் தனக்கு ஓட்டுநர் உரிமம், தனது வாகனத்திற்கு விபத்து காப்பீடு இல்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், விபத்து சமயத்தில், அரசுப்பேருந்து நேராக வந்தது என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1 தனது

சாட்சியத்தில் போலிசார் தன்னிடம் விபத்து தினத்திற்கு மறுதினம் வாக்குமூலம் பெற்றதாக சொல்லியுள்ளார். ஆனால், அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்திலும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆவணத்திலும், புகார் வாக்குமூலமானது 05.06.2019 ம் தேதி காலை 11 மணிக்கு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை அதே தேதியில் அதே நேரத்தில் பதிவு செய்யப்பட்டதாக காணப்படுகிறது. இது அரசுத்தரப்பிற்கு பெறும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

7.3) மேலும், அ.சா.ஆ.1 ஆவணமான புகார் வாக்குமூலத்திலும், அ.சா.ஆ.4 ஆவணமான முதல் தகவல் அறிக்கையிலும் எதிரியின் பெயர், விலாசம் மற்றும் அரசுப்பேருந்தின் பதிவெண் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காயம்பட்ட நபரான அ.சா.1 தனது சாட்சியத்தில், பேருந்து எண் மற்றும் ஓட்டுநரை பார்க்கவில்லை என சொல்லியுள்ளார். போலிசார் சொல்லித்தான் தனக்கு எதிரியின் பெயர், விலாசம், அரசுத்பேருந்தின் பதிவெண் ஆகியவை தெரியவந்தது என அ.சா.1 தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார். அ.சா.2 அவ்வாறே சொல்லி விபத்திற்கு பின்னர் அ.சா.1 மயக்கமடைந்ததாகவும் சொல்லியுள்ளார். இந்நிலையில் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் எவ்வாறு எதிரியின் பெயர், விலாசம் மற்றும் அரசுப்பேருந்தின் பதிவு எண் குறிப்பிடப்பட்டது என்று அரசுத்தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும், விபத்து சம்பவத்தினை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மாறாக அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும், அ.சா.1 க்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் அவர் தனது XL வாகனத்தை உரிய கவனத்துடன் ஓட்டிவந்ததாக அரசுத்தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது. ஆகவே, எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 279, 337 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 279, 337 இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 255(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 08.06.2026–ம் தேதி இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**(Statement Under rule 106 of Criminal Rules of Practice)**

| | | |
|---|---|---|
| 1. | அரசு சார்பாக – காவல்நிலையம் குற்ற எண்: | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.177/2019. |
| | **Description of the accused** | |
| 2. | பெயர் | ராம்குமார் (வயது 46/2019),<br>த/பெ.பூதநாதபிள்ளை,<br>பெரும்செல்வவிளை, ஆலூர் போஸ்ட், நாகர்கோவில். |
| 3. | கணவர்/ தகப்பனார் பெயர் | –– |
| 4. | தொழில் | –– |
| 5. | முகவரி | –– |
| 6. | வயது | –– |
| | **தேதிகள்** | |
| 7. | குற்ற நிகழ்வு | 05.06.2019 |
| 8. | புகார் நாள் | 05.06.2019 |

| | | |
|---|---|---|
| 9. | கைது செய்யப்பட்ட நாள் | 06.06.2019 |
| 10. | பிணையில் வந்த நாள் | 06.06.2019 (காவல் நிலைய பிணை) |
| 11. | விசாரணை தொடங்கிய நாள் | 20.03.2023 |
| 13. | விசாரணை முடித்த நாள் | 03.06.2026 |
| 14. | தீர்ப்பு விபரம், நாள் | 08.06.2026 (குற்றவாளி இல்லை) |
| 15. | தீர்ப்பு நகல் | 08.06.2026 |
| 16. | காலதாமத்திற்கான விளக்கம் | --- |

**வழக்கு சுருக்கம்**
**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021- நாளிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021)உத்தரவின் படி CASE SUMMARY கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

| **வ. எண்** | **விபரங்கள்** | **குறிப்புகள்** |
|---|---|---|
| 1. | குற்ற நிகழ்வு நாள்:<br>புகார் நாள்: | 05.06.2019<br>05.06.2019 |
| 2. | குற்ற எண்:<br>காவல் நிலையம்: | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.177/2019. |
| 3. | குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் அல்லது கூடுதல் குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர்கள் எதிரிகளின் பெயர், வயது, | ராம்குமார் (வயது 46/2019),<br>த/பெ.பூதநாதபிள்ளை,<br>பெரும்செல்வவிளை, ஆலூர் போஸ்ட், நாகர்கோவில். |
| 4. | எதிரி காவல் அடைப்பு நாள் | --- |
| 5. | எதிரி பிணையில் வெளியே வந்த நாள்(Ordinary Bail, Anticipatory Bail) | --- |
| 6. | குற்ற இறுதியறிக்கை நாள் | 22.06.2019 |
| 7. | வழக்கு தாக்கல் செய்த நாள் | 06.12.2022 |
| 8. | குற்றச்சாட்டு வனைந்த நாள் | 20.03.2023 |
| 9. | இடைக்கால மனுக்கள் | --- |

| | | | | |
|---|---|---|---|---|
| | விபரம் (Warrant Recall) | | | |
| 10. | எதிரி தலைமறைவு விபரம் | --- | | |
| 11. | மேல் நீதிமன்ற தடை உத்தரவு ஏற்பட்டிருந்தால் அதன் விபரம் | --- | | |
| 12. | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை விசாரித்த நாட்கள் | விசாரித்த நாட்கள் | | |
| | | அரசு தரப்பு சாட்சிகளின் எண்ணிக்கை | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1. | 05.09.2024 | 05.09.2024 |
| | | அ.சா.2. | 05.09.2024 | 05.09.2024 |
| | | அ.சா.3. | 19.05.2025 | 19.05.2025 |
| | | அ.சா.4. | 24.11.2025 | 24.11.2025 |
| | | அ.சா.5. | 10.04.2026 | 10.04.2026 |
| 13. | பிரிவு 313(1)(b) கேள்வி கேட்ட நாள் | 16.04.2026 | | |
| 14. | தாமத வழக்குகளின் விபரம்(Delay Reason) | --- | | |

<u>**பிற்சேர்க்கை**</u>

<u>**அரசு தரப்பு சாட்சிகள்–**</u>

1. அ.சா.1 ... திரு.செல்வேந்திரன்
2. அ.சா.2 ... திருமதி.பசுபதி
3. அ.சா.3 ... திரு.பூமிநாதன்
4. அ.சா.4 ... திரு.ஈஸ்வரன்
5. அ.சா.5 ... திருமதி.மாரியம்மாள் (சார்பு ஆய்வாளர்)

<u>**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**</u>

1. அ.சா.ஆ.1 – 05.06.2019 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம்
2. அ.சா.ஆ.2 – 05.06.2019 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம்
4. அ.சா.ஆ.4 – 05.06.2019 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை
5. அ.சா.ஆ.5 – பார்வை மகஜர்

6. அ.சா.ஆ.6 – வரைபடம்
7. அ.சா.ஆ.7 – விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று
8. அ.சா.ஆ.8 – TN 74 N 1872 என்ற பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை
9. அ.சா.ஆ.9 – TN 60 AZ 4862 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**பின்குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது ஜாமினில் இருந்து வந்துள்ளார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் சொத்துக்கள் இல்லை.
4. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

// உண்மை நகல்//

KAMARASU P Digitally signed by KAMARASU P
Date: 2026.06.08 17:18:30 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.